தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி

## மதிப்பீட்டுத் தாள் 2022–2023

## வளர்தமிழ் 8

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 180 மணித்துளிகள்
மொத்தப்புள்ளிகள் : 100

www.tamiledc.com

TEDC - FRANCE
TEDC- FRANCE
TEDC

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

TEDC

1. விக்கிரமராசசிங்கனுக்குப் படையணி ஒன்றை அனுப்பி உதவிய மன்னன்

அ) பண்டாரவன்னியன் ☐ ஆ) கயிலைவன்னியன் ☐

இ) காக்கைவன்னியன் ☐ ஈ ) சங்கிலியன் ☐

2. பள்ளியில் சிறுவர்கள் ஐயமின்றிக் கற்றனர். இச்சொல்லியத்தின் தோன்றாச் செயப்படுபொருள்

அ) பாடத்துக்கு ☐ ஆ) பாடத்தை ☐

இ) பாடத்தால் ☐ ஈ ) பாடத்தின் ☐

3. ஐம்பெருங்காப்பியங்களில் இடம்பெறாதது

அ) மணிமேகலை ☐ ஆ) குண்டலகேசி ☐

இ) வளையாபதி ☐ ஈ ) தொல்காப்பியம் ☐

4. விற்றான் என்பதன் இடைநிலை

அ) கல் ☐ ஆ) ஆன் ☐

இ) ற் ☐ ஈ ) றா ☐

5. எழுபத்தைந்தாம் ஆண்டு நிறைவில் எடுக்கப்படும் விழா

அ) பவளவிழா ☐ ஆ) வைரவிழா ☐

இ) பொன்விழா ☐ ஈ ) வெள்ளிவிழா ☐

6. பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் பெரும்பாலும் ________________ ஆகும்.

அ) பக்திஇலக்கியங்கள் ☐ ஆ) அறநெறிஇலக்கியங்கள் ☐

இ) கிறித்தவநெறிஇலக்கியங்கள் ☐ ஈ ) நாட்டார்இலக்கியங்கள் ☐

TEDC

7. நூற்றாண்டு என்பதைப் பிரித்து எழுதினால்

அ) நூற் + ஆண்டு ☐ ஆ) நூற்று + ஆண்டு ☐

இ) நூறு +ஆண்டு ☐ ஈ) நூறு + றாண்டு ☐

8. இலங்கையின் வடக்கே இந்தியா அமைந்துள்ளது. இச்சொல்லியம்___________ பொருளாகும்.

அ) நீங்கற் ☐ ஆ) ஏதுப் ☐

இ) ஒப்புப் ☐ ஈ) எல்லைப் ☐

9. காளமேகப்புலவர் பிறந்த ஊர்

அ) கும்பகோணம் ☐ ஆ) வயாவிளான் ☐

இ) தஞ்சாவூர் ☐ ஈ) மதுரை ☐

10. சிறுவனிடம் "சுட்டபழமாய்ப்போடு" என்று கேட்டவர்

அ) கபிலர் ☐ ஆ) ஔவையார் ☐

இ) பரணர் ☐ ஈ) விபுலாநந்தர் ☐

11. இறந்தகால இடைநிலைகள்

அ) ப், வ் ☐ ஆ) கிறு, கின்று ☐

இ) த், ட், ற், ன், இன் ☐ ஈ) ட், ப், ன், கிறு ☐

12. நாங்கள் உணவகத்தில் அறுசுவை உணவு உண்டோம். இதில் நாங்கள் என்பது

அ) படர்க்கைப்பன்மை ☐ ஆ) முன்னிலைப்பன்மை ☐

இ) தன்மைப்பன்மை ☐ ஈ) தன்மைஒருமை ☐

13. ‘‘நீலமணிமிடற்று ஒருவன் போல மன்னுக பெரும நீயே!’’ என ஔவையார் ____________ வாழ்த்தினார்.

அ) பேகனை ☐ ஆ) அதியர்மானை ☐

இ) சேரமானை ☐ ஈ) பாரியை ☐

14. ‘‘சம்பங்கி மல்லிகையொடு செவ்வந்திப் பூ மலிந்தன...’’ என்ற அடியில் மலிந்தன என்பது

அ) நிறைந்தன ☐ ஆ) செழித்தன ☐

இ) வளர்ந்தன ☐ ஈ) மலர்ந்தன ☐

15. தாய்நாட்டைக் காப்பது மக்களின் கடமையாகும். இங்கு இரண்டாம்வேற்றுமை உருபு ஏற்ற சொல்

அ) காப்பது ☐ ஆ) மக்கள் ☐

இ) தாய்நாடு ☐ ஈ) கடமை ☐

16. பண்டாரவன்னியனை நினைவுபடுத்தும் நடுகல் ________ உள்ளது.

அ) விசுவமடுவில் ☐ ஆ) கற்சிலைமடுவில் ☐

இ) உடையாவூரில் ☐ ஈ) முள்ளியவளையில் ☐

17. உலகின் முதல்மொழி தமிழ் என்று நிறுவியவர்

அ) மறைமலையடிகள் ☐ ஆ) தொல்காப்பியர் ☐

இ) பரிதிமாற்கலைஞர் ☐ ஈ) தேவநேயப்பாவாணர் ☐

18. முல்லைத்தீவில் கட்டப்பட்டுக்கொண்டிருந்த ஆங்கிலேயரின் கோட்டையை ____________ பண்டாரவன்னியனின் படையணிகள் தாக்கி அழித்தன.

அ) 1811இல் ☐ ஆ) 1678இல் ☐

இ) 1803இல் ☐ ஈ) 1833இல் ☐

19. மொழிக்கு இறுதியில் மட்டும் வரும் வினாஎழுத்துகள்

அ) ஆ, ஓ ☐ ஆ) எ, ஏ ☐

இ) ஏ, யா ☐ ஈ ) ஆ, எ ☐

20. இசைவிழா என்பது ______________ புணர்ச்சியாகும்.

அ) இயல்பு ☐ ஆ) தோன்றல் ☐

இ) கெடுதல் ☐ ஈ ) திரிதல் ☐

21. இளவேனில் மழைத்துளிகள் மெல்லச்சிந்தி உடலுக்குப் புத்துணர்வை அளிக்கின்றன. இச்சொல்லியம்

அ) கலப்புச்சொல்லியம் ☐ ஆ) கூட்டுச்சொல்லியம் ☐

இ) தனிச்சொல்லியம் ☐ ஈ ) ஏவற்சொல்லியம் ☐

22. வாசிக்கிறான் என்ற வினைச்சொல்லை இறந்தகாலமாக மாற்றினால்

அ) வாசிப்பான் ☐ ஆ) வாசித்த ☐

இ) வாசித்தான் ☐ ஈ ) வாசித்து ☐

23. வீட்டுக் கொல்லைப்புறங்களில் கூட வளரவிடாமல் பிடுங்கி எறியப்படும் செடி

அ) செவ்வந்தி ☐ ஆ) முல்லை ☐

இ) சம்பங்கி ☐ ஈ ) காட்டுமல்லிகை ☐

24. அம்பு போன்ற கண் என்ற உவமை அணியின் உவமானம்

அ) அம்பு ☐ ஆ) போன்ற ☐

இ) போல ☐ ஈ ) கண் ☐

25. பல்வேறு நாடுகளில் தமிழர் வாழ்கின்றனர். ___________ அவர்களுக்கு என்று ஒரு நாடு இல்லை.

அ) எனவே ☐ ஆ) ஆனால் ☐

இ) ஆகையால் ☐ ஈ ) ஏனெனில் ☐

26. பின்வருவனவற்றுள் விளிவேற்றுமை அல்லாதது

அ) மகனே ☐ ஆ) நண்பா ☐

இ) எங்கே ☐ ஈ ) தங்காய் ☐

27. பாடிப்பாடி, கதறிக்கதறி என்பன

அ) இணைமொழி ☐ ஆ) இரட்டைக்கிளவி ☐

இ) அடுக்கிடுக்குத்தொடர் ☐ ஈ ) அடுக்குத்தொடர் ☐

28. "கத்துகடல் சூழ்நாகை..." இதில் நாகை என்பது

அ) நாகபட்டினம் ☐ ஆ) நயினாதீவு ☐

இ) நாகர்கோவில் ☐ ஈ ) நல்லூர் ☐

29. அருளாண்மைவழியில் அறங்கேட்டு உண்ணாநோன்பு மேற்கொண்டு இந்தியத்தின் போலிக் காந்திய முகமூடியைக் கிழித்தெறிந்தவர்

அ) நெல்சன்மண்டேலா ☐ ஆ) மகாத்மாகாந்தி ☐

இ) திலீபன் ☐ ஈ ) அன்னை தெரேசா ☐

30. உழவன் என்பதன் எதிர்ப்பாற்சொல்

அ) உழத்தி ☐ ஆ) உலத்தி ☐

இ) உளத்தி ☐ ஈ ) உழவோர் ☐

புள்ளிகள் 30

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

ஒரு நாள் அன்னை தெரேசா வீதியில் நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது வழியில் மூதாட்டி ஒருவர் முகத்தைத் துணியால் மூடியபடி வீதி ஓரம் படுத்திருந்தார். ஒரு கையால் பூனைக்குட்டியை அணைத்துக் கொண்டு இருந்தார். அன்னை தெரேசா அவரின் அருகில் சென்று உற்று நோக்கினார். தொழுநோயின் கடுமையால் உண்டான வலி மூதாட்டியின் முகத்தில் தெரிந்தது. கைகளில் விரல்கள் இல்லை. அன்னை தெரேசா கண் கலங்கினார். மூதாட்டியின் அருகில் சென்று அவரைத் தொட்டுத் தூக்கினார். ''வீதி ஓரத்தில் படுத்து இருப்பது ஏன்'' எனக்கேட்டார். ''என்னைத் தொடாதீர்கள்; என் நோய் உங்களுக்கும் தொற்றிக்கொள்ளும்; என் உறவினர்களே என்னை வெறுத்து விலக்கி விட்டனர்; என்னுடன் பேசுவதில்லை; என்னைக் கண்டாலே விலகி ஓடுகின்றனர்: இந்தப் பூனை மட்டுமே என்னுடன் இருக்கிறது'' எனக் கூறி அழுதார் மூதாட்டி. இதைக் கேட்ட அன்னை தெரேசா கண்ணீர் விட்டார். இவரைப் போல ஆயிரக்கணக்கான நோயாளிகள் உதவி செய்ய யாருமின்றி வாடுவதைக் கண்டு மனம் வருந்தினார். அக்காலத்தில் தொழுநோய் கடுமையான தொற்று நோயாகக் கருதப்பட்டது. கருணை உள்ளம் கொண்ட அன்னை தெரேசா அவர்களுக்குத் தொண்டு செய்ய முடிவெடுத்தார். தமது இறுதிக் காலம் வரை பிறருக்காகவே வாழ்ந்தார். மக்களுக்குச் செய்யும் பணியே இறைவனுக்குச் செய்யும் பணி என்று வாழ்ந்தார். அதனால் அமைதிக்கான நோபல் பரிசு அவரைத் தேடி வந்தது.

1. மூதாட்டியை வெறுத்து விலக்கியவர்கள் யாவர்?

2. மூதாட்டிக்கு ஏற்பட்ட நோய் என்ன?

3. அன்னை தெரேசா எதைக் கண்டு மனம் வருந்தினார்?

4. அன்னை தெரேசா எப்படிப்பட்டவர்?

5. எதற்கான நோபல் பரிசு அன்னை தெரேசாவைத் தேடி வந்தது?

புள்ளிகள் 10

## 3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. பண்டாரவன்னியன் கைப்பற்றிய கோட்டைகள் எவை?

______________________________________________

2. முதல், இடைக்கழகங்கள் அமைந்திருந்த நிலங்கள் அழிவுற்றமைக்கான கரணியம் யாது?

______________________________________________

3. காளமேகப்புலவர் எப்படிப்பட்ட பாடல்களைப் பாடுவதில் வல்லவர்?

______________________________________________

______________________________________________

4. திருவாசகம், திருவருட்பா என்பன எந்நெறி சார்ந்த இலக்கியங்கள் ஆகும்?

______________________________________________

5. "தூதில் வென்று வருவதற்கு முன்னே - இதைத் தின்று சுவைத்திடுக...."
   என்று யாரால், யாருக்குக் கூறப்பட்டது?

______________________________________________

6. சீவகசிந்தாமணியை எழுதியவர் யார்?

______________________________________________

7. வழிப்போக்கருக்கு உண்டியும் உறைவிடமும் வழங்கும் இடத்தை எவ்வாறு அழைப்பர்?

______________________________________________

புள்ளிகள் 10

4) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக வைத்து, கவிதையை முழுமையாக்குக.

## நட்பு

| | | | | |
|---|---|---|---|---|
| நட்பு | சேர்ந்து | கொடுக்க | நண்பனின் | பழகுவது |

உறவுகள் அனைத்திலும் உயர்ந்தது நட்பு
உண்மையாய் இருந்தால் அதுவே சிறப்பு

உயிரையும் ________________ த் துணிவது நட்பு
உதடும் உள்ளமும் சிரிப்பது சிறப்பு

________________ தவறைக் கடிவது நட்பு
நாளும் பிரியாது இருப்பது சிறப்பு

துன்பத்திலும் இணைந்து இருப்பது ________________
தூய மனதுடன் ________________ சிறப்பு

விரைந்து சென்று உதவுவது நட்பு
விடியலுக்காய் ________________ உழைப்பது சிறப்பு

புள்ளிகள் 05

## 5) அ) பந்தியை வாசித்து இலக்கண வினாக்களுக்கு விடை எழுதுக.

அம்மா தன் மகளை அழைத்து, “தேன்மொழி குடையை எடுத்துத் தா!” என்றார். தேன்மொழி அம்மாவினது குடையை எடுத்துக் கொடுத்தாள். ‘‘குயிலி என்ன செய்கிறாள் பிள்ளை?’’ என்று அம்மா கேட்டார். ‘‘குயிலி கணினியில் வரைகின்றாள் அம்மா’’ என்றாள் தேன்மொழி. ‘‘ஆ! சரி. மழை பெய்து ஓய்ந்திருப்பதால் குழந்தைகள் முற்றத்தில் ஓடிஆடி விளையாடுகின்றார்கள். அவர்களை உள்ளே கூப்பிடு பிள்ளை.’’ என்று அம்மா கூறிவிட்டுச் சென்றார். தேன்மொழி பிள்ளைகளைக் கூப்பிட்டபோது அவர்கள் வீதிக்கு ஓடினர். அப்போது குயிலி வீட்டிலிருந்து புறப்பட்டுப் பள்ளிக்கு நடந்து சென்றாள். பள்ளியில் இசை வகுப்பு நடைபெற்றது. அங்கே குயிலியை விட வாணி நன்றாகப் பாடினாள். அவளது பாடற்திறமையை பள்ளியே பாராட்டியது.

1. ஏவல் சொல்லியம் ஒன்று தருக.

______________________________

2. நிகழ்கால வினைமுற்று ஒன்று தருக.

______________________________

3. ஒப்புப்பொருளுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

______________________________

4. நான்காம் வேற்றுமை உருபு ஏற்ற சொல் எது?

______________________________

5. வினையெச்சத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

______________________________

புள்ளிகள் 10

TEDC

**ஆ) 1. தரப்பட்டுள்ள சொற்களுடன் வேற்றுமை உருபுகளைப் புணர்த்தி எழுதுக.**

| **சொற்கள்** | **ஆல்** | **கு** | **அது** |
|---|---|---|---|
| அவையோர் | | | |
| நாங்கள் | | | |

புள்ளிகள் 03

**2. தரப்பட்டுள்ள சொல்லைப் பகுத்து எழுதுக.**

| **சொல்** | **விகுதி** | **இடைநிலை** |
|---|---|---|
| நடித்தாள் | | |
| போவர் | | |

புள்ளிகள் 02

## 6) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

வலையில்  அளித்தன  வாணம்  அழிந்தன  வானம்  வளையில்

அதிகாலையிலேயே மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்றனர். ____________ இருந்த நண்டுகள் கடற்கரையில் அங்குமிங்கும் ஓடித்திரிந்தன. மீனவர்கள் நடுக்கடலுக்குச் சென்று மீன்களைப் பிடித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் ____________ சிக்கிய மீன்களை ஒவ்வொன்றாக எடுத்து வள்ளத்துக்குள் போட்டனர். அப்பொழுது ____________ இருண்டு பெருமழை பெய்யத்தொடங்கியது. உடனே மீனவர்கள் அச்சத்துடன் கரையை நோக்கி வள்ளங்களைச் செலுத்தினர். தொடர்ந்து பெய்த மழையினாலும் வீசிய புயற்காற்றினாலும் கடற்கரையிலிருந்த சிறு குடிசைகள் ____________ . இதைக் கேள்வியுற்று உதவும் அமைப்புகள் மழையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப் பொதிகளை ____________ .

புள்ளிகள் 05

## 7) பந்தியை உமது வாழிடமொழியில் மாற்றி எழுதுக.

நாம் எமது தாய்நாட்டை மறக்கக் கூடாது. அங்கேதான் எமது தாய் தந்தையர்கள் பிறந்து வாழ்ந்தனர். எமது தாய்மொழி தமிழ். நம் தாய்மொழி தமிழை தமிழ்ப்பள்ளிகளுக்குச் சென்று கற்க வேண்டும். நாம் எங்கு வாழ்ந்தாலும் தாய்மொழியில் பேச வேண்டும். தமிழ்மொழியில் நிறைந்த அறிவைப் பெற்று நாம் தமிழராக வாழ்வோம்.

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

புள்ளிகள் 05



TEDC

**8) தரப்பட்டுள்ள பழமொழிகளுக்குப் பொருத்தமான கருத்தைத் தெரிவு செய்து எழுதுக.**

✸ குறைந்த பலன் கூடிய செலவு.

✸ பிற்கால வளர்ச்சி இளமைச் செயல்களில் தெரியும்.

✸ உண்மையின் உயர்வு.

✸ எதற்கும் முன்னேற்பாட்டுடன் இருத்தல் வேண்டும்.

✸ எதுவும் பயிற்சியால் இயலும்.

1. சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்.

   ________________________________________

2. சுண்டங்காய் காற்பணம் சுமைகூலி முக்காற்பணம்.

   ________________________________________

3. விளையும் பயிரை முளையில் தெரியும்.

   ________________________________________

4. உண்மை சொல்லிக் கெட்டவரில்லை.

   ________________________________________

5. வெள்ளம் வருமுன் அணை கட்ட வேண்டும்.

   ________________________________________

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 125 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- தமிழ் இலக்கிய வளம்
- தமிழுக்குத் தந்த கனி
- பொழுதுபோக்குகள்
- விளையாட்டுகள்
  - விளையாட்டுகளின் பெயர்கள்
  - தனி, குழு விளையாட்டுகள்
  - மரபுவழி விளையாட்டுகள்
  - விளையாட்டுகளில் பங்குபற்றுவதனால் ஏற்படும் நன்மைகள்

புள்ளிகள் 15

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TEDC